

திருவண்ணாமலை மாவட்ட திமுக சார்பில், இனமான பேராசிரியர் அவர்களின் 5ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு, அவரது திருவுருவப் படத்திற்கு பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, வடக்கு மாவட்ட செயலாளர் எம்.எஸ்.தரணிவேந்தன்.எம்.பி, டாக்டர் எ.வே.கம்பன், சி.என்.அண்ணாதுரை. எம்.பி., இரா.ஸ்ரீதரன், சட்டமன்ற உறுப்பினர்கள் மு.பெ.கிரி, பெ.சுதி.சரவணன், ஒ.ஜோதி மற்றும் எஸ்.பன்னீர்செல்வம், பிரியா விஜயரங்கன், பகார்திவேல்மாறன், நிர்மலாவேல்மாறன், மெய்யூர்.சந்திரன், தரமணன், ஆராஞ்சி ஆறுமுகம், குட்டி புகழேந்தி உட்பட பலர் உள்ளனர்.



இனமான பேராசிரியர் பெருந்தகை அவர்களின் 5 ஆம் ஆண்டு நினைவு நாளையொட்டி பெரம்பலூர் மாவட்ட கழக அலுவலகத்தில் அவரது திருவுருவப்படத்திற்கு கழகத் துணைப் பொதுச் செயலாளர் ஆ.ராசா எம்.பி. மலர் தூவி மரியாதை செலுத்தினார். பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன், மாவட்ட கழகச் செயலாளர் வீ.ஜெகதீசன் மற்றும் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர,பேரூர் கழக நிர்வாகிகள், அனைத்து சார்பு அணிகளின் பொறுப்பாளர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உடனிருந்தனர்.

### திருவண்ணாமலை மாவட்ட தி.மு.க. சார்பில்

# இனமான பேராசிரியர் 5ஆம் ஆண்டு நினைவு நாள்!

## பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு மாலை அணிவித்து மரியாதை!

திருவண்ணாமலை, மார்ச் 8-

திருவண்ணாமலை மாவட்ட திமுக சார்பில், முன்னாள் கழக பொதுச் செயலாளர் இனமான பேராசிரியர் அவர்களின் 5ஆம் ஆண்டு நினைவு நாள் அனுசரிக்கப்பட்டது. பேராசிரியர் அவர்களின் திருவுருவப்படத்திற்கு பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

07.03.2025 வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு, திருவண்ணா மலை, திருக்கோயிலூர் சாலை, சாரோனில் உள்ள மாவட்ட திமுக அலுவலகத்தில், முன்னாள் கழக பொதுச் செயலாளர் இனமான பேராசிரியர் அவர்களின் 5ஆம் ஆண்டு நினைவு நாள் அனுசரிக்கப்பட்டது.

நிகழ்ச்சிக்கு சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி அவர்கள் தலைமை வகித்தார்.

வடக்கு மாவட்ட செயலாளர் எம்.எஸ்.தரணிவேந்தன்.எம்.பி., கழக மருத்துவர் அணி துணைத் தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன், நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, தலைமை செயற்குழு உறுப்பினர் இரா.ஸ்ரீதரன், சட்டமன்ற உறுப்பினர்கள் மு.பெ.கிரி, பெ.சு.தி.சரவணன், ஒ.ஜோதி, மாவட்ட பொருளாளர் எஸ்.பன்னீர்செல்வம், மாவட்ட துணை செயலாளர் பிரியா விஜயரங்கன், நகர செயலாளர் ப.கார்த்திவேல்மாறன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த இனமான பேராசிரியர் அவர்களின் திருவுருவப்படத்திற்கு பொதுப்பணித்துறை அமைச்சரும், கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினருமான எ.வ.வேலு அவர்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். கழக முன்னோடிகள் மலர்த்தூவி மரியாதை செலுத்தினர்.

நிகழ்ச்சியில் மாநில தொ.மு.ச. துணைத் தலைவர் க.சௌந்தரராசன், மாநகராட்சி மேயர் நிர்மலா வேல்மாறன், மாவட்ட அமைப்பாளர்கள் டி.வி.எம். நேரு, காலேஜ் கு.ரவி, ஏ.ஏ.ஆறுமுகம், கு.கணேஷ், எஸ்.டி.ஆர்.எஸ்.பாபு, கற்பகம்சரவணன், உ.நித்யா, ஒன்றிய செயலாளர்கள் மெய்யூர்.சந்திரன், த.ரமணன், ஆராஞ்சி.ஆறுமுகம், மாநகராட்சி துணை மேயர் சு.ராஜாங்கம்,

நகர நிர்வாகிகள் சி.சண்முகம், மு.கருணாமூர்த்தி, வட்டி அருணாச்சலம், குட்டி க.புகழேந்தி, இல.குணசேகரன், அ.கண்ணன், து.சக்கரவர்த்தி, துரை. வெங்கட், மாவட்ட துணை அமைப்பாளர்கள் எஸ்.கண்ணதாசன், பா.ஷெரீப், டி.பென்ராபர்ட், டி.எம். வெங்கடேசன், ஏ.எம். பாஷா, இரா.பூவராகவன், ப.நீலகண்டன், இரா.ராஜசேகரன், பச்சையம்மாள் யேசு, காமாட்சிபாண்டியன், அய்யம்பாளையம் திருநாவுக்கரசு, ஆ.தே.முருகையன், ஜீவிதாவைத்தியலிங்கம், வெ.காசிநாதன், இலட்சுமணன் மற்றும் வழக்கறிஞர் ம.செந்தில், நகர இளைஞர் அணி அமைப்பாளர் மண்டி, ஆ.பிரகாஷ், ஒன்றிய பொருளாளர் மண்டி ஏழுமலை, நகர இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் சாம்.ரகுநாத், சூரியபிரகாஷ், ம. வினோத் குமார், சென்னை சுரேஷ், கோல்டு.மஞ்சு, ஜாகீர்உசேன், கீதாமுருகன், தயாளன், டி.என்.அருண்குமார், க.திலீப்குமார் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# செஞ்சி நகர திமுக சார்பில் இனமான பேராசிரியர் நினைவு நாள்!

## திருவுருவப்படத்திற்கு – செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. மாலை அணிவிப்பு!

செஞ்சி மார்ச் 8.

விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சி நகர திமுக சார்பில் இனமான பேராசிரியர் அவர்களின் 5 ஆண்டு நினைவு தினம் நேற்று அனுசரிக்கப்பட்டது.

இதை முன்னிட்டு செஞ்சி பேருந்து நிலையம் எதிரில்அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த இனமான பேராசிரியரின் திருவுருவப் படத்திற்குசெஞ்சி நகர செயலாளர் கார்த்திக் தலைமையில்விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளரும் செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் செஞ்சி மஸ்தான் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார் தொடர்ந்து தமிழ்நாட்டில் இந்தியை திணிக்க முயற்சிக்கும் ஒன்றிய பாஜக அரசை கண்டித்தும் தமிழ்நாடு போராடும் தமிழ்நாடு வெல்லும் உறுதி மொழியை அனைவரும் ஏற்றனர்.

நிகழ்ச்சியில்செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலி மஸ்தான்,

மாவட்ட கவுன்சிலர் அரங்க ஏழுமலை,பொதுக்குழு உறுப்பினர் மணிவண்ணன்,பேரூராட்சி மன்ற துணைத் தலைவர் ராஜலஷ்மி செயல் மணி, நகர பொருளாளர் நெடுஞ்செழியன், பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள், சங்கர், சீனிவாசன், சுமித்ரா சங்கர், பொன்னம்பலம், சிவகுமார், லட்சுமி வெங்கடேசன், நூர்ஜகான் ஜாபர், மோகன், நிர்வாகிகள் மாவட்ட ஆதிதிராவிடர் நல அணி துணை அமைப்பாளர் சேகர் ,ஜே எஸ் சர்தார், தொண்டரணி பாஷா,கோகுல், சந்திரன், சம்பத்,ஒன்றிய அவைத் தலைவர் வாசு,பிரதிநிதி அய்யாதுரை, மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி துணை அமைப்பாளர் பிரபு, செழியன், கோகுல், பஸ் ஸ்டாண்ட் செல்லன், தொ.மு.ச. நிர்வாகிகள் லூர்து இமானுவேல்,அரிகிருஷ்ணன், உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர் கச்சேரி தெருவில் கோஆப் டெக்ஸ் புதிய கட்டிடத்தை திருப்பத்தூர் மாவட்ட ஆட்சித்தலைவர் க.சிவசௌந்தரவள்ளி தலைமையில் திருப்பத்தூர் மாவட்டச் செயலாளரும், ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினருமான க.தேவராஜி முன்னிலையில் கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி கலந்து கொண்டு திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் அ.நல்லதம்பி, ஆம்பூர் சட்டமன்ற உறுப்பினர் அ.செ.வில்வநாதன், திருப்பத்தூர் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் என். கே.ஆர்.சூரியகுமார், திருப்பத்தூர் மாவட்ட ஆவின் மு.தலைவர் எஸ்.ராஜேந்திரன் மற்றும் அரசு துறை அதிகாரிகள், கழக முன்னோடிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டார்கள்.

### இந்தித் திணிப்பு – தொகுதி மறுசீரமைப்பு! ஒன்றிய அரசைக் கண்டித்து

# திருப்பத்தூர் மாவட்ட இளைஞர் அணி சார்பில் பொதுக்கூட்டம்!

## க.தேவராஜி எம்.எல்.ஏ. – பிரபு கஜேந்திரன் – அ.நல்லதம்பி எம்.எல்.ஏ. – துரை சம்பத் – இள.விஷ்ணு வரதன் சிறப்புரை!

திருப்பத்தூர், மார்ச். 8-

கழக இளைஞர் அணி செயலாளர் துணை முதலமைச்சர் அண்ணன் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பிற்கிணங்க இந்தி திணிப்பு நிதி பகிர்வில் பாரபட்சம் தொகுதி மறுசீரமைப்பில் அநீதி இழைக்கும் ஒன்றிய அரசை கண்டித்து திருப்பத்தூர் மாவட்டம் திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதி திருப்பத்தூர் நகரம் புதுப்பேட்டை ரோடு பஸ் ஸ்டாப் அருகில் 9.3.2025 ஞாயிற்றுக்கிழமை மாலை 5.00 மணியளவில் கண்டன பொது கூட்டம் நடைபெறுகிறது.

திருப்பத்தூர் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் வீ. வடிவேல் தலைமையிலும் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் டி.எஸ். தமிழ்மணி வரவேற்பிலும் திருப்பத்தூர் நகர செயலாளர் சு. இராசேந்திரன் ஒன்றிய செயலாளர்கள் க. முருகேசன் கே.ஏ.குணசேகரன் அ. மோகன்ராஜ் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் வி.வி. கிரிராஜ் நா. பெ. பிரபு சி. எஸ். செந்தில் குமார் முன்னிலையிலும் நடைபெறும் இந்த கூட்டத்தில் தலைமை கழக பேச்சாளர் துரை. சம்பத் இள. விஷ்ணு வரதன்

மாவட்ட கழக செயலாளர் க.தேவராஜி, மாநில இளைஞர் அணி துணை செயலாளர் பிரபு கஜேந்திரன், திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் அ. நல்லதம்பி திருப்பத்தூர் தொகுதி பார்வையாளர் ரமேஷ் ஆகியோர் சிறப்புரையாற்றுகிறார்கள்.

இந்த கூட்டத்திற்கு நகர ஒன்றிய பேரூர் இளைஞர் அணி அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் மற்றும் கழக இளைஞர் அணி நிர்வாகிகள் கழக முன்னோடிகள் பொது மக்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு மாவட்ட இளைஞர் அணி சார்பில் மாவட்ட அமைப்பாளர் வீ.வடிவேல் கேட்டுக்கொண்டுள்ளார்.

### விழுப்புரம் வடக்கு மாவட்டத்தில்

# பொதுமக்களுக்கு நீர் மோர் பந்தலை அமைத்து உதவிடுவீர்!

## மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. அறிக்கை!

செஞ்சி மார்ச் 7.

விழுப்புரம் வடக்கு மாவட்டத்தில் நிலவும் கடும் கோடை வெப்பத்தை முன்னிட்டு பொதுமக்களின் தாகம் தீர்த்திடும் வகையில் விழுப்புரம் வடக்கு மாவட்டம் முழுவதும் பொது மக்கள்அதிகமாக கூடும் இடங்களில் தண்ணீர் மோர் பந்தல்களை திமுக நிர்வாகிகளும் தோழர்களும் அமைத்திட வேண்டும் என விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளரும் செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் செஞ்சி மஸ்தான் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.இதுகுறித்து அவர் விடுத்துள்ள



அறிக்கையில்:

தமிழ்நாட்டில் கடந்த சில வாரங்களாகஇயல்பு நிலையை விட 3 முதல் 5 டிகிரி செல்சியஸ் வரை வெப்பத்தின் அளவு அதிகரித்துள்ளது அதனால்தான் மார்ச், ஏப்ரல் மாதத்தில் அதிகபட்ச அளவு 105 டிகிரிவரைவெயில்சுட்டெரிக்கிக்கும் எனக் கூறப்படுகிறது.எனவே கோடை வெப்பத்தை சமாளித்திடவும், பொதுமக்களின்தாகம் தீர்த்திடவும் கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சர், சமூக நீதி காவலர் திராவிட நாயகன் மாண்புமிகு மு. க. ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க கழக இளைஞரணி தலைவரும்,துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படியும் விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சி, மயிலம், திண்டிவனம் ஆகிய தொகுதியில் பொதுமக்கள் அதிகமாக கூடும் இடங்களில் கழகத்தின் மாநில, மாவட்ட, ஒன்றிய,நகர, பேரூர் கழக நிர்வாகிகள்அனைத்து அணி அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள்உள்ளாட்சி பிரதிநிதிகள் ஆகியோர் தண்ணீர் மோர் பந்தல்களை அவர் அவர் பகுதியில் திறந்திட வேண்டும் எனவும் ,தண்ணீர் பந்தல்களில் பொது மக்களுக்கு வழங்குவதற்காக இளநீர், தர்பூசணி பழம், முலாம்பழம், நுங்கு வெள்ளரிப்பிஞ்சுகள் குளிர் பானங்கள் மோர் மற்றும் குடிநீர் ஆகியவற்றை ஏற்படுத்திடவேண்டும் எனவும்,கோடை காலம் முடியும் வரை தண்ணீர் மோர் பந்தல்கள் தொடர்ந்து செயல்பட வேண்டுமென எனவிழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



கழக தலைவர், முதலமைச்சர் அவர்களின் 72 பிறந்தநாளை முன்னிட்டு இராணிப்பேட்டை எஸ்.கே.மஹாலில் மாபெரும் இரத்ததான முகாம் நடைபெற்றது. கைத்தறி மற்றும் துணிநூல்துறை அமைச்சர் இராணிப்பேட்டை ஆர்.காந்தி ரத்ததான முகாமைத் துவக்கி வைத்தார். இதில் மாவட்ட மருத்துவரணி அமைப்பாளர் சரவணன் துணை அமைப்பாளர்கள் தாமரைக்கண்ணன், விமல் பிரபாகரன்கிருஷ்ணமூர்த்தி, சுப்பிரமணி மாவட்ட அவைத்தலைவர் ஏ.கே.சுந்தரமூர்த்தி, மாவட்ட துணை செயலாளர் குமுதா குமார், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ஜெயந்தி திருமூர்த்தி, நகர செயலாளர் பி.பூங்காவனம், பேரூர் செயலாளர் பெரியசாமி, நகர துணை செயலாளர் ஏர்டெல் குமார், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் எஸ்.வினோத், கோபிகிருஷ்ணன், நகர இளைஞர் அணி அமைப்பாளர் அஜ்மல் மற்றும் கழகத்தினர் உடனிருந்தனர்.



இனமான பேராசிரியர் அவர்களின் நினைவு நாளை முன்னிட்டு அவரின் திருவுருவப் படத்திற்கு விழுப்புரம் தெற்கு மாவட்ட திமுக சார்பில் மாவட்டச் பொறுப்பாளர் டாக்டர்.பொன்.கௌதமசிகாமணி மலர் தூவி மரியாதை செலுத்தினார். சட்டமன்ற உறுப்பினர் அன்னியூர் அ.சிவா, மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ம.ஜெயச்சந்திரன், ஒன்றிய செயலாளர்கள் வழக்கறிஞர் கல்பட்டு வி. இராஜா R.முருகன், ஒன்றியக்குழு தலைவர் திருமதி நா.கலைச்செல்வி நடராஜன், ஆனந்தன், சுப்பிரமணி, அன்பழகன், ஏழுமலை, சரவணன், சுப்புராயன்,பாரதி நாகராஜன்,பழனி, சக்கரவர்த்தி, கருணாகரன்,சிவராமன்,அரசு வழக்கறிஞர் பொன்.கோபு,ஒன்றிய கவுன்சிலர் கோபி, ஒன்றிய விவசாய அணி கணேசன்,ஒன்றிய விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் கலைமணி,கிளை கழக செயலாளர்கள் வெங்கடேசன்,ராஜா,ஆனந்தராஜ், ஆரோக்கியதாஸ்,கெடார் அண்ணாமலை, ஊராட்சி மன்ற தலைவர் கலையரசி செந்தில், தகவல் தொழில்நுட்ப அணி ப.அன்பரசு பாலாஜி,கதிரவன் ராகுல் கலைமணி உள்ளிட்டோர் உடனிருந்தனர்.



கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்களின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு, விழுப்புரம் மத்திய மாவட்டம், விழுப்புரம் சட்டமன்ற தொகுதி, காணை தெற்கு ஒன்றியம், தெளி ஊராட்சியில் விழுப்புரம் மத்திய மாவட்ட கழக பொறுப்பாளரும், விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினருமான டாக்டர் இரா.இலட்சுமணன் அவர்கள் பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் மாவட்ட பொருளாளர் இரா.ஜனகராஜ், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு இணை செயலாளர் செ.புஷ்பராஜ், பொதுக்குழு உறுப்பினர் சம்பத், காணை தெற்கு ஒன்றிய கழக செயலாளர் கல்பட்டு ராஜா, காணை ஒன்றிய குழு பெருந்தலைவர் கலைச்செல்வி, மாவட்ட கவுன்சிலர் சிவக்குமார், மாவட்ட விவசாய அணி துணை தலைவர் சுந்தரமூர்த்தி, மாவட்ட பிரதிநிதி செல்வம், கொத்தமங்கலம் சந்திரன், ஒன்றிய துணை செயலாளர் செல்வராஜ், ஒன்றிய கவுன்சிலர் ஜெயா குமரன், கிளைச் செயலாளர்கள் தாஸ், அரிகிருஷ்ணன், கோனூர் மண்ணாங்கட்டி , பிரதிநிதிகள் பீட்டர், எழில் ராஜா, வில்லியம், முருகன், அன்பழகன் மற்றும் கழக நிர்வாகிகள், பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.